# 10

## வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...

# துணைவரின் வீட்டார் குறித்த பிரச்சனைகளை சரிசெய்தல்

*பல்வேறு கலாச்சாரங்களில் துணைவரின் வீட்டார் வெவ்வேறு விதமாகப் பார்க்கப்படுகின்றனர். விசேஷமாக அமெரிக்காவில், மாமியார்கள் தான் பல நகைச்சுவைகளின் தலைப்பாயிருக்கிறார்கள். இருப்பினும், புதிதாய் திருமணமான ஒரு தம்பதியின் வாழ்க்கையில் ஒருமாமியார் தலையிடுவது என்பது நகைச்சுவைக்குரிய ஓர் விஷயமாயிராது. திருமணமான பிள்ளையின் மேல் அந்த மாமியார் ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும்போது, அல்லது புதிதாய் வரப்பெற்ற மருமகளையோ அல்லது மருமகனையோ குறைகூறும் போது மணவாழ்க்கையில் பிரச்சனைகள் எழும்புகின்றது. அந்த தலையீட்டிற்கு என்ன செய்யலாம் என்பதில் தம்பதியருக்குள் கருத்து வேறுபாடு வருமானால் சூழ்நிலை இன்னும் மோசமாகிறது.*

*ஒருவேளை, புதிதாய் திருமணமானவர்களின் வாழ்க்கையில் துணைவரின் வீட்டார் தலையிடாமலிருந்தாலும் கூட, அவர்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்படுவதற்கு அவர்கள் காரணமாயிருக்கக்கூடும். உதாரணமாக, விடுமுறை காலத்தை எந்த அப்பா அம்மாவுடன் கழிப்பது? எந்தக் குடும்பத்தின் பாரம்பரிய வழக்கங்களை இந்த புதுக்குடும்பம் பின்பற்றுவது? என்பன போன்ற கேள்விகள் இழுபறியை உண்டாக்கி விடலாம்.*

*நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போது (ஒரு மனைவியோ அல்லது ஒரு கணவனை மட்டுமல்லாமல்) உங்கள் துணைவரின் வீட்டாராகிய ஓர் ஒட்டுமொத்த கூட்டத்தையே நீங்கள் சொந்தமாக்கிக் கொள்வீர்கள் என்பது நிச்சயம்[1]. நீங்களும் உங்கள் துணைவரும், வேதவசனத்தின் போதனையின்படி துணைவின் வீட்டாரோடு சகவாசமாயிருக்கக் கற்றுக் கொள்ளாத பட்சத்தில், அவர்கள் மூலம் உங்கள் மணவாழ்க்கைக்கு கஷ்டம் உண்டாகலாம். துணைவரின் வீட்டாரைப் பற்றிய விஷயத்தில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?*

## துணைவரின் வீட்டாரைக் குறித்த ஓர் நல்லெண்ண மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்

*முதலாவதாக உங்கள் துணைவரின் வீட்டாரைக் குறித்து ஒரு நேர்மறையான எண்ணப்போக்கை மேம்படுத்த வேண்டும். அமெரிக்க பண்பாட்டில், துணைவரின் வீட்டார், குறிப்பாக மாமியார்கள், முற்றிலும் எதிர்மறையான கண்ணோட்டத்திலேயே பார்க்கப்படுகின்றனர். துணைவரின் வீட்டாரோடு சச்சரவுகள் வராமலிருக்காது என்று எண்ணுவதில் எந்த விதமான நியாயமில்லை. துணையாளிகளைப் பற்றிய இரண்டு எடுத்துக்காட்டுகளை வேதாகமம் நமக்குத்*

தருகிறது. அவையாவன: நகோமி மற்றும் அவளது மருமகளாகிய ரூத்தைப் பற்றிய அழகிய சம்பவம்[2], அடுத்து, மோசே மற்றும் அவனது மாமனாகிய எத்திரோ பற்றிய வரலாறு[3]. உங்களது துணைவரது குடும்பத்தாரோடு இணக்கமான உறவிலிருப்பதற்குரிய தீர்மானத்தோடு மனவாழ்வைத் துவங்குவதுதான், புகுந்தவீட்டுப் பிரச்சனைகள் எழுவதற்கு முன்பே அதை நிறுத்துவதற்கோர் சிறந்த வழியாகும்.

உங்களது துணைவரின் வீட்டாரைப் பற்றிய நல்லெண்ண மனோபாவத்தை நீங்கள் எவ்விதம் வளர்த்துக் கொள்ளலாம்? இதோ, சில ஆலோசனைகள்:

1. *உங்கள் துணைவரோ அல்லது உங்கள் துணைவியோ அவரது பெற்றோர் மீது அன்பு வைத்திருக்கிறார் என்பதை ஒத்துக்கொள்ளுங்கள்.* நீங்கள் நேசிக்கும் ஒருவருக்கு மிக முக்கியமானவர்களாகிய இவர்களை நீங்கள் நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்! நீங்களிருவருமே கடைப்பிடிக்க வேண்டிய ஓர் நல்ல விதி முறை என்னவென்றால், *"உங்கள் வாழ்க்கைத்துணையாளியின் குடும்பத்தினரை ஒருபோதும் குறைசொல்லாதீர்"* என்பதுவே. ஒருவேளை நீங்கள் அவர்களைக் குறைசொல்லுகையில், உங்கள் துணையாளி அவர்களைத் தற்காக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படலாம்.

2. *உங்கள் வாழ்க்கைத்துணைவரது மாமனார் மாமியாராய் இருப்பவர்கள் உங்களது பெற்றோர்களே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.* உங்கள் பெற்றோரிடம் உங்களது துணைவர் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்கள்? உங்களது பதில் எதுவாயிருப்பினும், நீங்களும் உங்கள் துணைவரது பெற்றோரிடம் அதுபோலவே நடந்துகொள்ள வேண்டும் என்று பொன்விதி[4] உங்களுக்கு ஆலோசனை அளிக்கும். அதாவது நீங்கள் உங்கள் துணைவர் மீது அன்புவைத்திருப்பதாலும், உங்கள் பெற்றோரை நீங்கள் நேசிப்பதாலும், உங்கள் துணைவரது வீட்டாரிடம் நீங்கள் நல்லபடி நடந்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது!

3. *உங்கள் துணைவரிடம் உங்களுக்கு பிடித்தமானவைகளாயிருப்பவை எவைகளோ, அவைகளுக்கு காரணமே அவரது பெற்றோர்கள்தான் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுங்கள்*[5]. உங்களது அன்பிற்குரியவரது தோற்றம், உடலமைப்புகள், புத்தி சாமர்த்தியங்கள் ஆகியவை அவர்களிடமிருந்து வந்தவைகள்தான். நீங்கள் திருமணம் செய்து கொண்ட இந்த நபர் இவ்விதமாயிருப்பதற்கு அவர்கள் இவரை வளர்த்தவிதம்தான் பெரும் காரணமாயிருக்கிறது. முறைப்படி பார்த்தால், தங்களுடைய பிள்ளையை, நீங்கள் நேசித்து, ரசிக்கத்தக்க வகையிலானதோர் நபராக உருவாக்கியதற்காக நீங்கள் உங்கள் மாமனார் மாமியாருக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

4. *துணைவரின் குடும்பத்தினர், குறிப்பாக, மாமியார் ஏன் அவ்விதமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்பதையும் புரிந்து கொள்ள முயலுங்கள்.* உங்களது திருமணத்தை உங்கள் மாமியாரின் கண்ணோட்டத்தில் இருந்து பாருங்கள். பொதுவாகவே, அப்பாக்களைவிட அம்மாக்கள்தான் பிள்ளைகளுடன் மிகவும் நெருக்கமானவர்களாயிருக்கிறார்கள். தனது பிள்ளைகளில் ஒன்றிற்கு திருமணமாகும்போது, ஒரு தாய்க்கு பல்வேறு விதமான மனகிளர்ச்சிகள் உண்டாவதுண்டு. உதாரணமாக, ஓர் இளவயது வாலிபன் திருமணம் செய்துகொண்டால், அவனது மனைவி, அவனைத் தான் இதுவரை கவனித்துக் கொண்டதுபோல் கவனிக்காமல்போய் விடுவாளோ என்று அவனது தாய்

கவலைகொள்வதற்கு ஏதுவுண்டு. ஒருவேளை, என் பிள்ளைதான் வளர்ந்து, வீட்டைவிட்டு வெளியேறிவிட்டானே, இனிமேல் என்வாழ்வில் நான் செய்ய வேண்டுவதென்ன என்று திகைத்து நிற்கவும் சாத்தியமுண்டு. மகன் தன்மீது காட்டிய பாசத்தில் இந்த மருமகள் இடம்பிடித்துக் கொண்டால் அவன் தன்மீது பாசமற்றவனாய் போய்விடுவானோ என்று தாய்க்கு பயமும் ஏற்படலாம். திருமணமானதும் அவன் குடும்பத்தினரைக் கைவிட்டு விடுவானோ என்று ஒருவேளை அவனது தாய் கவலைப்படலாம். மகளுக்கு திருமணமானால், அவள் மணமுடிக்கும் அந்த நபர் அவளுக்கு ஏற்றவர்தானோ என்ற சந்தேகம் அம்மாவுக்கு (அப்பாவுக்கும்கூட) எழும்பலாம்.

இத்தகைய அச்சங்களையெல்லாம் தணிப்பதுதான் புதுமணத் தம்பதியினரின் முக்கியப் பணியாயிருக்கிறது - அதாவது, இருஜோடிப் பெற்றோரையுமே தாங்கள் நேசிப்பதையும், அவர்களை கைவிட்டு விடமாட்டோம் என்பதையும் அவர்களுக்கு உறுதியாய் உணர்த்துகின்ற பணி. அதுமாத்திரமல்லாமல், அவர்களது பெற்றோரை அவர்கள் புரிந்துகொள்ளவும், அவர்கள்மீது பரிவுகாட்டவும் கடுமையாக முயற்சிக்க வேண்டும் - ஏனென்றால் இன்னுமொரு இருபது வருடவாக்கில் இவர்களது பிள்ளைகளுக்கு திருமணமாகும் போது இவர்களுக்கும் இதேவிதமான உணர்வுகள்தான் ஏற்படப்போகிறது!

5. *திருமணம் செய்து கொள்ளும் நீங்கள், ஒரு வாழ்க்கைத்துணையை மட்டுமல்லாமல், முற்றிலும் புதிதான ஓர் குடும்பத்தையே சொந்தமாக்கிக் கொள்ளுகிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.*[6] நீங்கள் அந்தக் குடும்பத்தின் ஓர் அங்கமாக மாறி, ஒருக்கால் நாற்பது அல்லது ஐம்பது வருடகாலம் அதில் அங்கமாயிருப்பீர்கள்[7]. அந்தக் காலகட்டத்தில் அந்தக் குடும்பத்துடனான உங்கள் உறவு எப்படியிருக்கும்? நடைமுறை கண்ணோட்டத்தில் பார்த்தால், உங்கள் துணைவரதுவீட்டாரோடு நீங்கள் அனுசரித்துப் போவதுதான் சம்பந்தப்பட்ட அனைவருக்குமே நன்மை யாயிருக்கும். நாற்பதாண்டு கால மன உளைச்சல் அல்லது சச்சரவைக் காட்டிலும், நாற்பதாண்டுகால சமாதானமும் நல்லிணக்கமுமே அதிகம் விரும்பத்தக்கது.

## பெற்றோரின் வீட்டைவிட்டு உங்கள் வீட்டை தனியே அமைத்திடுங்கள்

திருமணம் செய்துகொள்ளும்போது, நீங்கள் பெரியவர்களாகிவிட்டதாகவும், பெற்றோரின்றியே உங்களது அன்றாட வாழ்க்கையை சமாளித்துக் கொள்ள முடிந்தவர்களென்று நீங்கள் கருதுவதாகவும் சுட்டிக் காட்டுகிறீர்கள். திருமணத்தின்போது ஒரு ஆண், “தன் தகப்பனையும் தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்” என்று இயேசுவானவர் கூறினார் (மத்தேயு 19:5). “உங்கள் பெற்றோரை விட்டுப் பிரிதல்” என்றால், அவர்களிடமிருந்து நீங்கள் சுதந்தரம் பெற்றுவிட்டதை பிரகடனப்படுத்தி, நீங்களும் உங்கள் துணைவியும், வளர்ந்துவந்த வீடுகளை விட்டு, தனியாக ஓர் வீட்டை ஏற்படுத்தப் போகிறீர்கள் என்று பொருளாகும்.

### சுதந்திரம் என்பதன் பொருள் என்ன?

இன்றைய உலகின் பல பகுதிகளில், தம்பதியர் தம் சுதந்திரத்தை

நிலைநாட்டுதல் என்றால், நீங்கள் பெற்றோரரை விட்டு தனிக்குடித்தனம் நடத்தப்போகிறீர்கள் என்றுதான் அர்த்தம். புதுமணத் தம்பதியராயிருப்பதனால், உங்களிருவரில் யாரோ ஒருவருடைய பெற்றோருடனேயே வாழ்வதற்கு நீங்களும் உங்கள் துணைவரும் தீர்மானிக்கிறீர்கள் என்றால், அப்போதும் கூட நீங்கள் உங்கள் ஓர் சுயேச்சையான அமைப்பாகவே கருதிட வேண்டும் - அதாவது, உங்கள் பிள்ளைப்பருவத்து குடும்பங்களிலிருந்து தனிப்பட்டு இயங்குகிற ஓர் குடும்பமாகவே கருதிட வேண்டும்.

உங்கள் புதிய குடும்பத்தின் சுதந்திரத்தில் பின்வரும் அனைத்து விஷயங்களுமே சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்:

1. *பொருளாதார சுதந்திரம்.*[8] உங்களது சொந்த பொருளாதார நலனுக்கு நீங்கள்தான் பொறுப்பு.

2. *முடிவெடுக்கும் சுதந்திரம்.* பெற்றோர் என்ன நினைக்கிறார்களோ அதன்படிதான் செய்தாக வேண்டுமென்ற எண்ணமில்லாமல் நீங்கள்தான் உங்கள் தீர்மானங்களை முடிவு செய்ய வேண்டும்.

3. *உள்ளத்து உணர்வுகளில் சுதந்திரம்.* உங்களுக்கு தேவைப்படும் உணர்வுபூர்வமான ஆதரவிற்கு பெற்றோரை நாடாமல், நீங்களிருவரும் ஒருவரையொருவர் சார்ந்திருங்கள்.

4. *சரீர சுதந்திரம்.* உங்கள் பெற்றோருடனோ அல்லது அவர்களை விட்டு வெளியிலோ, சூழ்நிலைகேற்ப எங்கு வேண்டுமானலும் நேரம் செலவழிக்க நீங்கள் சுதந்திரமாய் இருக்க வேண்டும்.

### சுதந்திரம் உங்களை எதைச் செய்யவிடாது

திருமணமாகும்போது நீங்கள் உண்மையிலேயே உங்களது பெற்றோரரை "விட்டுப் பிரிகிறவர்களாயிருப்பீர்களேயானால்," சில காரியங்களை நீங்கள் செய்யமாட்டீர்கள். திருமணமாகும் போது நீங்கள் உதாரணத்திற்கு, இளவயது மனைவியாகிய உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்படும் போதெல்லாம் அம்மாவிடம் சொல்லி அழுவதற்கு உங்கள் வீட்டை நோக்கி ஓடமாட்டீர்கள். அத்தோடு, உங்கள் கணவரை உங்கள் அப்பாவுடன் ஒப்பிட்டு அவருக்கு எதிராக பேசிடமாட்டீர்கள். கணவராகிய நீங்கள், உங்களையோ அல்லது உங்கள் மனைவியையோ, உங்களது தாயார் ஆதிக்கம் செலுத்துவதற்கு விட்டுக்கொடுக்க மாட்டீர்கள். அத்தோடு, உங்கள் அம்மாவைப் போல சமைக்கவில்லையென்பதற்காகவோ, அல்லது உங்கள் அம்மாவைப்போல வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ளவில்லை என்பதற்காகவோ உங்கள் மனைவியைக் குறை சொல்லமாட்டீர்கள். உங்கள் அம்மாவின் சமையல் மற்றும் சுத்திகரிப்பு ஆகியவை, நீங்கள் விட்டுவந்த கடந்த காலத்து அம்சங்கள். உங்கள் மனைவியானவள் உங்கள் தாயாரின் பிரதிபிம்பமாயிராமல், தன்னால் இயன்ற அளவிற்கு ஓர் சிறந்த மனைவியாயிருக்கும்படியாக அவளை ஊக்கப்படுத்துவதான் இப்போது உங்கள் வேலையாயிருக்கிறது. அவள் எதைச் செய்தாலும், அது உங்கள் அம்மா செய்ததைப் போல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில் சந்தோஷப்படுங்கள்.

### சுதந்திரம் சாதிப்பது என்ன

நீங்களும் உங்களது வாழ்க்கைத்துணைவரும் ஓர் புதிய தனிப்பட்ட,

*சுயாதீனமான இல்லத்தை உருவாக்கியிருக்கிறீர்கள் என்றால், எந்தக் குடும்பத்து பாரம்பரிய வழக்கங்களை அனுசரிப்பது என்பதை நீங்கள்தான் முடிவு செய்யப் போகிறீர்கள் என்று பொருள்படும். உங்களது பிள்ளைப் பருவத்துக் குடும்பங்களிலிருந்த சிலவற்றைக் கடைப்பிடிக்கலாம் அல்லது நீங்களாகவே உங்களுக்கென்று புதிய பாரம்பரிய வழக்கங்களை வளர்த்துக் கொள்ளலாம். முடிவில், உங்கள் இல்லத்தின் பழக்கவழக்கங்கள் எல்லாம், முன்பு நீங்கள் இருவரும் வளர்ந்து வந்த இருவேறு குடும்பத்து பழக்கவழக்கங்களும் நீங்களாகவே வகுத்துக்கொண்ட பாரம்பரிய வழக்கங்களுமாகச் சேர்ந்த ஓர் கலவையாகத்தான் இருக்கும்.*

## இருதரப்பு பெற்றோர்களையும் விட உங்கள் துணையாளிக்கு முதலிடம் அளித்திடுங்கள்

*திருமணமானதும், நீங்களும் உங்கள் கணவரோ அல்லது மனைவியோ தொடர்ந்து உங்களது சொந்தப்பெற்றோரை நேசிக்கிறவர்களாக இருப்பதோடு, தங்கள் துணைவரது பெற்றோரையும் நேசிப்பதில் விருத்தியடைய வேண்டியதே. ஆயினும், நீங்கள் ஒவ்வொருவருமே உங்கள் பெற்றோரைவிட உங்கள் துணையாளியை அதிகமாய் நேசிக்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள். உங்களது வாழ்வில், அன்பின் பல்வேறு படிநிலைகளிருப்பதில் தவறேதுமில்லை.[9] நீங்கள் உங்கள் வாழ்க்கையில் பலர்மீது அன்புகாட்டுகிறவராயிருக்கலாம். ஆனால் உங்கள் துணைவரை நேசிக்கும் அளவிற்கு அல்லது அவர்மீது அன்பு செலுத்தும் விதத்தில் வேறு யார்மீதும் அன்பு செலுத்துதல் கூடாது.*

*உங்கள் பெற்றோர் உட்பட, மற்ற எல்லோரையும் விட உங்களது வாழ்க்கைத் துணையை நீங்கள் நேசிப்பீர்களேயானால், கூட்டுக் குடும்பத்தில் சச்சரவுகள் எழும்போது உங்கள் வாழ்க்கைத் துணையின் பக்கமாகத்தான் சாய நினைப்பீர்கள். உங்களது பெற்றோர்கள் உங்கள் துணையாளியை குறை சொல்லிப் பேசும்போது நீங்களும் அதில் அவர்களோடு சேர்ந்துகொள்ளாமல் உங்கள் அன்பிற்குரியவருக்கு ஆதரவாகவே பேசுகிறவர்களாயிருப்பீர்கள். நீங்கள் இதைத்தான் செய்தாக வேண்டுமென்று பெற்றோர் ஓர் புறமும், உங்கள் துணையாளி மற்றொரு புறமும் உங்களை நிர்ப்பந்திக்கும்போது, உங்கள் துணையாளியின் சொற்படிதான் நீங்கள் செய்ய நினைப்பீர்கள். வழக்கமான சூழ்நிலைகளில்[10] உங்கள் பெற்றோருடனா அல்லது துணையாளியுடனா, யாருடன் நேரம் செலவிடவேண்டுமென்ற நிலைவரும்போது, நீங்கள் உங்கள் துணையாளியுடனேயே இருக்க விரும்புவீர்கள்.*

## இருதரப்பு பெற்றோருடனும் முறையாக நடந்து கொள்ளுங்கள்

*ஒரு கிறிஸ்தவன் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமோ, அவ்விதமாகவே நீங்கள் ஒவ்வொருவரிடமும் (உங்கள் துணைவரிடமும் கூட) நடந்து கொள்ள வேண்டியது உங்களது தலையாய கடைமையாயிருக்கிறது. எனவே, இருதரப்பு பெற்றோரிடமும் நீங்கள் அன்பாகவும், பரிவாகவும், கரிசனையாகவும், உதவிகரமாகவும், சுயநலமில்லாதவராகவும் இருப்பதற்கு பிரயாசப்படுங்கள்[11]. உங்கள் துணைவரின் வீட்டாருக்கு உங்களைப் பிடிக்கவில்லை அல்லது*

*அவர்கள் உங்களை தரக்குறைவாக நடத்துகிறார்களென நீங்கள் கருதினால் - ஒருவேளை அவர்களை நீங்கள் எதிரிகளாக எண்ணினாலும்கூட - கிறிஸ்துவானவரின் வழிகாட்டுதல்களையும், முன்மாதிரிகளையும் நீங்கள் அனுசரிக்கிறவர்களாயிருப்பீர்கள்:*

*1. ''உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்'' என்று இயேசு சொல்லியிருக்கிறபடியால், நீங்கள் அவர்களை நேசியுங்கள் (மத்தேயு 5:44).*

*2. கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களை மன்னித்தது போலவே நீங்கள் அவர்களை மன்னியுங்கள் (எபேசியர் 5:32).*

*3. தீமைக்கு தீமை செய்யாமல், தீமைக்கு நன்மை செய்யும்விதத்தில் அவர்களுக்கு நல்லதையே செய்திடுங்கள் (ரோமர் 12:20, 21).*

*இருதரப்பு பெற்றோரையும் முறையாக நடத்துதல் என்ற விஷயத்தில், அவர்களுக்கு எது மிகச் சிறந்ததோ அதை அவர்களுக்கு செய்வதும்[12], குறிப்பாக, அவர்களது தேவைகளைப் புரிந்து கொண்டு அவைகளை நிறைவேற்றுவதும், உள்ளடங்கியிருக்கிறது. உதாரணத்திற்கு, கணவனாகிய நீங்கள் உங்கள் மனைவி இப்போது உங்களுக்கு மட்டுமே சொந்தமானவள் என்றும், வேறு யாருடனும் அவளைப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் வாதிடலாம்; ஆனால் அன்போ, அவளது பெற்றோர் தங்களது மகளை அவ்வப்போது பார்க்க வேண்டியது அவசியம்தானே, என்ற உணர்வை உங்களுக்குள் ஏற்படுத்தும். அதன் காரணமாக, உங்கள் மனைவி அவ்வப்போது அவர்களோடிருப்பதற்கு சந்தோஷமாக இடம் கொடுப்பீர்கள்.*

*இருதரப்பு பெற்றோரிடமும் நீங்கள் நியாயமான விதத்தில் நடந்துகொள்ள வேண்டும். கூடுமானவரையில் உங்களது நேரத்தையும் கவனத்தையும், உங்கள் பெற்றோருக்கும் உங்கள் துணைவரின் பெற்றோருக்குமிடையில் சரிசமமாக பகிர்ந்து கொள்வீர்கள் என்பதுவே அதன் பொருளாகும். இவர்களில் யாரைப் போய் பார்க்க வேண்டும், எப்போது போய் பார்க்க வேண்டும் என்ற விஷயத்தில் நீங்களும் உங்கள் துணையாளியும் முறையான முடிவுக்கு வர இயலாத சமயத்தில், "பூசல்களை சரிசெய்தல்" சம்பந்தமாக அளிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு நீங்கள் செவிசாய்த்தாக வேண்டும்.*

## பெற்றோரை கவனிக்க வேண்டிய பொறுப்பு வளர்ந்த பிள்ளைக்கு உண்டு

*பெற்றோர் வயது சென்றவர்களாகி, தங்களைத்தாங்களே கவனித்துக்கொள்ள இயலாதவர்களாயிருக்கும்போது அவர்களைக் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு பிள்ளைகளுடைய தான் எனவேதாகமம் போதிக்கிறது. பெற்றோருக்கு பண உதவி செய்தலை, "பெற்றோரை கனம் பண்ணுதலுக்கு" சமமானதாக இயேசு சுட்டிக்காட்டினார் (மத்தேயு 15:1-9)[13]. இந்த பெற்றோர்களில் ஒருதரப்பினரையோ அல்லது இருதரப்பினரையுமோ கவனித்துக் கொள்வதற்கு, நீங்களும் உங்கள் துணைவரும் வழிவகை செய்யவேண்டிய காலம் வரலாம்.*

## முடிவுரை

*துணைவரின் வீட்டார் சம்பந்தமான வேறுசில நடைமுறை ஆலோசனைகளை நார்மன் ரைட் அவர்கள் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.*

*திருமணம் செய்து கொள்ளத் திட்டமிடுகிற தம்பதியருக்கென்றே "துணைவரின் வீட்டாரிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்கான குறிப்பிட்ட சில அணுகுமுறைகள்" பற்றி அவர் ஆலோசனையளித்திருக்கிறார்.*

- *துணைவரின் வீட்டார் உறவுகுறித்த உங்களது அபிப்பிராயம் நேர்மறையானதாகவும், நல்நம்பிக்கையுள்ளதாகவும் இருக்கட்டும்.*
- *வருங்கால துணைவருடன் நீங்கள் தொடர்புகொள்ளும் ஆரம்ப கால கட்டத்திலேயே, அவரது குடும்பத்தாரின் முக்கியத்துவதை நீங்கள் உணர்ந்திடுங்கள்.*
- *உங்கள் குடும்பத்து பின்னணியிலுள்ள எந்த பழக்க வழக்கங்கள் உங்களுக்கு அவசியமானதென்றும், புதிதாக எவைகளை முயற்சிப்பது அல்லது ஏற்படுத்திக்கொள்வது என்பதையும் சீர்தூக்கிப் பாருங்கள்.*
- *உங்கள் பெற்றோருக்கும், உங்கள் துணைவரின் பெற்றோருக்கும், அவர்களது வாழ்க்கையின் இந்தக் காலகட்டத்தில் என்ன தேவைகளிருக்கிறதோ அவைகளைக் கருத்தில் கொள்ளுங்கள்.*
- *நீங்கள் உங்கள் நண்பர்களுக்கு அளித்திடும் அதே கவனிப்பையும், மரியாதையும், உங்களது எதிர்கால துணைவரின் வீட்டாருக்கும் அளித்திடுங்கள்.*
- *உங்கள் எதிர்கால துணைவரது வீட்டார் அறிவுரை கூறும்போது, அதனை உங்கள் நண்பர்கள் சொன்னால் எவ்விதம் நடந்து கொள்வீர்களோ அவ்விதமாகவே நடந்து கொள்ளுங்கள்.*
- *உங்களது எதிர்கால துணைவரின் வீட்டாரிடமுள்ள நல்ல பண்புகளைக் கண்டறிய நாடுங்கள்.*
- *உங்களது எதிர்கால துணைவரின் வீட்டாரை நீங்கள் பார்க்க சென்றால் (அவர்கள் உங்களைப் பார்க்க வந்தாலும்), அந்த விஷயங்களின் காலஅளவைக் கூடுமானவரையில் கணிசமாக குறைத்துக்கொள்ளுங்கள்.*
- *திருமணமாகும்போது, உங்கள் துணைவரது குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு அவரது வீட்டார் சீர்பொருந்தி வருவதற்கு அவர்களுக்கு கால அவகாசம் அளித்திடுங்கள்.*
- *உங்களது எதிர்கால துணைவரது வீட்டாருக்கு நீங்கள் ஏதாவது ஆலோசனை கூறவிரும்பினால், அவர்களாகவே அதுபற்றி உங்களிடம் கேட்கும்வரை நீங்கள் பொறுத்திருப்பது நல்லது.*
- *உங்களிருவருக்கும் இடையே வரும் பூசல்களைக் குறித்தும், உங்கள் எதிர்கால துணைவரது குறைபாடுகளைப் பற்றியும் உங்கள் குடும்பத்தினரிடம் நீங்கள் விவாதிக்காதீர்கள்.*
- *உங்களது எதிர்கால துணைவரிடத்தில் உங்கள் குடும்பத்தினரை மேற்கோள் காட்டியோ அல்லது அவர்களை முன்மாதிரிகளாக உயர்த்திக் காட்டியோ பேசாதீர்கள்[14].*

*திருமணமாகும்போது உங்கள் துணைவரது வீட்டாரோடு நல்லுறவிலிருப்பது எவ்வாறு என்பதைப் பற்றி நீங்கள் சிந்திக்கையில், நீங்களும் உங்கள் துணைவரும்கூட ஓர் நாளிலே மாமியார் மாமனார் ஆகத்தான்*

*போகிறீர்கள் என்ற உண்மையைக் கருத்தில் கொள்வது அவசியமாயிருக்கிறது. உங்களிடம் மற்றவர்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்விதமாகவே நீங்கள் உங்கள் துணைவரிடம் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அவர்களிடம் கொண்டுள்ள உறவைப்போலத்தான் உங்கள் பிள்ளைகள் திருமணம் செய்து கொள்பவர்களும் உங்களிடம் சம்பந்தப்பட்டு இருப்பார்கள்.*

---

*குறிப்புகள்*

*[1]துணைவரின் வீட்டார் குறித்த பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கு ஒரே ஒரு வழி, சொந்தபந்தங்கள் யாருமே இல்லாத ஒருவரைத் திருமணம் செய்து கொள்வதுதான். அப்படிப்பட்டதொரு காரியத்தை நீங்கள் செய்ய சாத்தியமில்லை. [2]ரூத் புத்தகத்தில் காணவும். [3]யாத்திராகமம் 2:15-22; 4:18; 18:1-27 ஐப் பார்க்கவும். எத்திரோ, மோசேயைத் தனது வளர்ப்பு மகனாகவே பாவிக்கிறான். (மேலும் எண்ணாகமம் 10:29-32 ஐயும் பார்க்கவும்.) மாமனாருக்கும் மருமகனுக்குமிடையே ஏற்படும் சங்கடத்திற்கு எடுத்துக்காட்டாக, லாபான் மற்றும் யாக்கோபு பற்றிய சம்பவத்தைப் பாருங்கள் (ஆதியாகமம் 29-31). [4]"பொன் விதி" எனப்படும் மத்தேயு 7:12 மற்றொரு விதத்தில், "பிறர் உங்களுக்கு எப்படி செய்ய வேண்டுமோ அப்படியே நீங்களும் அவர்களுக்கு செய்திடுங்கள்" என வழக்கமாய் சொல்லப்படுவதுண்டு. [5]இந்த விதி முறைக்கு விதிவிலக்குகளும் இருக்கத்தான் செய்கிறது: தங்களது பெற்றோரது மோசமான நடவடிக்கையைக் காணும் பிள்ளைகள், பெற்றோரின் போக்கைப் புறக்கணித்து விட்டு, பெற்றோரை விட பக்தியுள்ளவர்களாக மாறி விடுவதுமுண்டு (எசேக்கியேல் 18:5-18 ஐப் பார்க்கவும்). [6]இந்தக் கருத்தானது அமெரிக்க தேசத்திலே கடந்த காலங்களில் அதிகமாக காணப்பட்டிருந்த போதிலும், தனித்துவம் மற்றும் தாத்தாபாட்டியில்லாமல் பெற்றோரும் பிள்ளைகளும் மட்டுமே இருக்கிற "உட்கரு குடும்பத்தை" நவநாகரீகம் வலியுறுத்துகின்ற காரணத்திலும், அவ்வப்போது அலட்சியப்படுத்தப்பட்டுவருகிறது. இதர சமூகங்களில் இன்றும் கூட, புதுமண தம்பதியர், ஒருவர் மற்றவரது குடும்பத்தின் அங்கமாவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. உங்களது துணைவரின் வீட்டாரில் நீங்களும் ஒரு அங்கமாகின்றீர்கள் என்ற கருத்தானது, ரூத் தனது மாமியாகிய நகோமியிடம் பேசிய பேச்சில் வெளிப்படையாய்த் தெரிந்தது: "நீர் போகுமிடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்" (ரூத் 1:16ஆ, 17அ). [7]ஒருவகையில் பார்க்கப்போனால், உங்கள் துணைவரால் இதுவரை சமாளிக்கவே முடியாத அவரது அப்பா, அம்மா, வெகுளித்தங்கை, பொறுப்பற்ற தம்பி ஆகியோர் இப்போது உங்களுடைய அப்பா, அம்மா, தங்கை, தம்பியாக மாறிவிட்டார்கள். அவர்கள்மீது ரொம்ப குறைப்பட்டுக் கொள்வதற்கு முன், அடுத்தவர் பார்வையில் உங்கள் சொந்தக் குடும்பம் எப்படியிருக்கிறது என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்! [8]இது, வளர்ந்த பிள்ளைகளுக்கு பெற்றோர் உதவுவதை தடைசெய்வதில்லை. ஆயினும் இந்த இளம்தம்பதியர் எப்போதுமே பெற்றவர்களைச் சார்ந்து வாழ்கின்றவர்களாயிருக்கக் கூடாது என்பதில், உதவி செய்யும் பெற்றோர் மட்டுமல்லாமல், உதவி பெறும் பிள்ளைகளும் கூட உறுதியாயிருக்க வேண்டும். [9]"தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல" என்று இயேசு,*

*குறிப்பிடுகையில், தமது சீஷர்களுக்கு அன்பின் பல்வேறு படிநிலைகள் இருக்க வேண்டியது அவசியம் என்பதை சுட்டிக்காட்டுகிறார் (மத்தேயு 10:37அ). பேதுருவைப் பார்த்து இயேசு கேட்கும் கேள்வியையும் கவனியுங்கள்: "இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" (யோவான் 21:15அ). பிரசங்கிமார் அடிக்கடி சொல்லுவதென்னவெனில், நாம் முதலாவது இயேசுவையும், இரண்டாவதாக பிறரையும், மூன்றாவதாக நம்மையும் நேசிக்க வேண்டுமாம். [10]நோய்வாய்ப்பட்ட உங்கள் பெற்றோரை நீங்கள் கூட இருந்து கவனித்துக் கொள்ள வேண்டியது போன்ற அவசர நிலைமைகளில் இவ்விஷயத்தில் விதிவிலக்களிக்கப்பட வேண்டும்.*

*[11]ஒரு கிறிஸ்தவன் பிறரிடம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்ற குறிப்பினை 1 கொரிந்தியர் 13:4-7ல் காணவும். [12]"அவர்களுக்கு எது மிகச்சிறந்ததோ அதையே செய்தல்" என்பது, கிறிஸ்தவ அன்பிற்கான மிக நெருங்கிய விளக்கத்தைத் தருகிறது. [13]மேலும் 1 தீமோத்தேயு 5:4, 8, 16 ஐப் பார்க்கவும். [14]நார்மன் ரைட் அவர்களின் So You're Getting Married* (Ventura, Calif.: Regal Books, 1985), 236-39 *என்ற புத்தகத்திலிருந்து.*